**சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குகளைப் பரீட்சித்தல் கட்டணம் மற்றும் சுங்கத்தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியம் - 2019**

---

## 1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குகளைப் பரீட்சித்தல் கட்டணம் மற்றும் சுங்கத் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான மற்றும் செலவுகள் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சுங்க கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 135(2)(ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும். பொதுப்பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு வவுச்சர்கள், கொடுப்பனவு வவுச்சர், முதலிய

பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணுதல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நிதியத்தின் ஒட்டுமொத்த கடன்பட்டோர் மீதியான ரூபா 125,457,248 தொகையில் 5 சதவீதம் அல்லது ரூபா 6,272,862 தொகை, ஐயக் கடனுக்காக ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் இக்கடன்பட்டோரில் 42 சதவீதமும் 2015 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் மீதியாகும். கடன்பட்டோரின் உள்ளமை மற்றும் ஆயுட்காலத்தை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது ஐயக் கடனுக்காக பொதுவான வீதம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. | ஒட்டுமொத்த கடன்பட்டோர் மீதியான ரூபா 125,457,247 பெறுமதியில் ரூபா 53,163,000 தொகை2015 ஆம் ஆண்டிற்கும் ரூபா 1,763,642 தொகை 2018 ஆம் ஆண்டிற்கும் ரூபா 70,530,605 தொகை 2019 ஆம் ஆண்டிற்கும் உரியவையாகும். கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கடன்பட்டோரில் 42 சதவீதம் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட பெறுமதியாகக் காட்டப்பட்டிருந்தும் சிறிலங்கன் விமானக் கம்பனியிடமிருந்து 2015 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டி இருந்த மேலே காட்டப்பட்ட ரூபா 53,163,000 பெறுமதியாகும். 2015 ஆம் ஆண்டு தொடர்பான விமானப் பயண நேர அட்டவணைகளில் காணப்பட்ட தவறுகளின் காரணமாக இந்நிலுவைப் பணத்தை சிறீலங்கன் விமானக் கம்பனி செலுத்தாதிருந்ததுடன் இத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் சிறீலங்கன் விமானக் கம்பனியின் உத்தியோகத்தர்களுடன் அந்த நேர அட்டவணையை மீண்டும் பரீட்சித்து உரிய இன்வொயிஸ் பெறுமதியை சரிசெயது கொள்ளுதல் இடம்பெற்று வருகின்றது. அவ்வாறு சரிசெய்து கொள்ளப்பட்ட மாதத்திற்காக படிப்படியாக | கடன்பட்டோர்களிடம் இருந்தான அறவீடுகளை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு ஐயக் கடனுக்காக பொதுவான விகிதம் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அப்பணத்தை சிறீலங்கன் விமானக் கம்பனியின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. (கணக்காய்வுப் பந்தி இலக்கம் 02 இன் கீழ் விபரம் காட்டப்பட்டுள்ளது) அதற்கிணங்க இன்று வரை 2015 ஆம் ஆண்டின் சனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்காக ரூபா 12,303,000 செலுத்தப்பட்டுள்ளது. மேலும் சுங்கத் திணைக்களத்திற்கு பிணை வைப்பினை வைத்து கப்பல் கம்பனிகளுக்காக கடன் அடிப்படையில் சேவையினை வழங்குவதனால் கணக்காண்டின் இறுதியில் உரிய கணக்காண்டின் நவம்பர், திசெம்பர் ஆகிய மாதங்களுக்காக கொடுப்பனவினை மேற்கொள்ளல் அடுத்த ஆண்டின் தொடக்க மாதங்களில் மேற்கொண்டதன் காரணமாக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கணக்காண்டின் இறுதியில் அந்த ஆண்டு தொடர்பாக குறிப்பிடத்தக்க அளவான கடன்பட்டோர் மீதி சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிக் காணப்பட்ட ரூபா 125,457,248 கூட்டு மொத்தமான கடன்பட்டோர் மீதிகளில் 55 சதவீதம் அதாவது ரூபா 69,589,500 தொகை சிறீலங்கன் | இந்த அறிக்கையின் 1.5.2 ஆம் பந்திக்கான பதில் தொடர்புபட்டதாகும். | இக்கம்பனி ஒரு ஆயுட்கால அங்கத்தவர் என்பதனால் உரிய மீதியை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எயார்லைன்ஸ் கம்பனியிடமிருந்து நிதியம் அறவிட வேண்டியிருந்தது. இந்நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1967 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 75 நிறுவனங்களினால் இலங்கை சுங்கத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 253,314 பணத்தை வெளி முதலீடுகளில் ஈடுபடுத்துவதனூடாக வட்டி வருமானம் ரூபா 13,077,421 தொகையை உழைத்ததனால் ஒட்டு மொத்த முதலீடு ரூபா 13,330,735 ஆக இருந்தது. இந்த நிறுவனங்கள் உள்ளமையைப் போல் தற்பொழுது சேவை வழங்குவது தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ளப்படாது உரிய மீதி பொறுப்புக்கள் மற்றும் முதலீட்டுக் கணக்குகளில் முன்கொண்டு வந்து காணப்பட்டது. | இந்த 75 நிறுவனங்களின் பெயரில் இன்றுவரை சேவை வழங்குதல் இடம்பெறாததனால் பிணை வைப்பினை புலனாய்வு செய்ய முடியாத நிலை காணப்பட்டதுடன் இந்த நிறுவனங்களின் உள்ளமை தொடர்பாக கம்பனி பதிவாளரிடம் விசாரணை செய்யப்பட்டது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் இப்பணத்தை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு உள்ள இயலுமை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவிக்கின்றேன். | தற்பொழுது சேவை வழங்குதல் மற்றும் நிறுவனங்களின் உள்ளமை தொடர்பாக புலனாய்வு செய்து முறையான கணக்கு வைத்தலை மேற்கொள்ளல் அல்லது தேவையான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 103 ஆம் பிரிவு, 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 17/1520 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2002 திசெம்பர் 31 ஆந் திகதிய | • உதவிக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தரால் (துறைமுக கடமை) கொள்கலன் செயற்பாடு தொடர்பான தரவுகளை நாளாந்தம் கணக்காளர் (மேலதிக நேரம்) | • உதவி கட்டுப்பாட்டு உத்தியோகத்தரின் (துறைமுக கடமை) மூலம் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற மேலதிக நேர வேலை அறிக்கைகளை நாளாந்தம் கணக்காளருக்கு | கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 218(F) இலக்க உள்ளக சுற்றறிக்கை | அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | (மேலதிக நேர வேலை) அனுப்புதலும் பரீட்சித்தலும் நடைமுறையில் சிக்கலானதாகும். | |
| | • மேலதிக நேர வேலை பெறுவனவுகள் நிலுவையாகக் காணப்படுவதனைத் தவிர்த்துக் கொள்வதற்காக விலைப்பட்டியல்கள் நாளதுவரையாக வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | • மேலதிக நேர வேலைப் பெறுவனவுகள் நிலுவையாக இருந்ததனால் பெரும்பாலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| | • கப்பல் முகவர்களின் தகவல்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் தரவுகளுடன் பரீட்சித்து உறுதிப்படுத்தல் அறிக்கை பிரதான கட்டுப்பாட்டு உத்தியோகத்தரினால் கணக்காளருக்கு (மேலதிக நேர வேலை) வழங்கப்பட்டிருக்க வில்லை. | • இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக உரிய பிரிவிற்கு தெரியப் படுத்தப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். | கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| | • கொள்கலன் செயற்பாட்டு தகவல்களின் சரியான தன்மையைப் பரீட்சித்தல் இலங்கை சுங்கத்தின் துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப் பட்டிருந்தும் அதற்காக சட்டரீதியான செயற்பாடுகளை ஒப்படைத்தல் அல்லது | • இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக உரிய பிரிவுகளுக்கு தெரியப் படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | உள்ளக சுற்றறிக்கை தொடர்பாக அதிக கவனம் செலுத்தி நிலைமையை முறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறை காணப்படவில்லை. | | |
| • கப்பல் முகவர் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 100,000 தொகையான வைப்புக்களை பொருத்தமான வழியில் முதலீடு செய்து வட்டி வருமானத்தில் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பகுதியை இனங்கண்டு மிகுதியை வைப்பாளருக்குச் செலுத்த வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | • இலங்கை சுங்கத்தினால் கடல்சார் செயற்பாடுகள் தொடர்பாக கப்பலின் உள்நாட்டு முகவர் அல்லது கப்பலுக்குச் சொந்தமான கம்பனியின் உள்நாட்டு முகவர்களிடமிருந்து ரூபா 100,000 வைப்புப் பணம் பெற்றுக் கொள்ளப்படும். இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட வைப்பு பணம் பொதுத் திறைசேரியின் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் 1/128 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்படுகின்றது. அவ்வாறே இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தை அதே தினத்திலேயே திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தின் வங்கி கணக்குகள் வலையமைப்பின் கீழ் சுங்க பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேணப்பட்டு வருகின்ற மக்கள் வங்கியின் 00110129026664 ஆம் இலக்க கணக்கிற்கு செலவு வைக்கப்படுகின்றது. அதற்கிணங்க இக்கணக்கின் கீழ் ஒன்று திரண்டுள்ள பணத்தை பொதுத் திறைசேரியின் வங்கி மேலதிகப்பற்றிற்காகச் செலுத்துகின்ற வட்டியைக் | உள்ளக சுற்றறிக்கை தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறைப்பதற்கு வசதி செய்யப்படும். மேலும், இப்பிணை முறிகளை வருடாந்தம் புதுப்பித்து அக்கப்பல் கம்பனிகள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதுடன் அவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களின் போது (சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல் நிறுத்தப்படுகையில்) இப்பிணையை மீண்டும் வழங்குதல் வேண்டும். எனவே சேகரிக்கப்பட்ட பிணை வைப்புக்கள் அனைத்தும் முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துதல் நடைமுறைச் சாத்தியமற்றது என தயவாகத் தெரிவிக்கின்றேன். | |
| (ஆ) | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 2017/3 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | அனைத்து அரசாங்க சேவையாளர்களும் தமது வருகை மற்றும் வெளிச் செல்லலினை பதிவு செய்வதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரங்களை பயன்படுத்த வேண்டிய போதிலும், இலங்கை சுங்கத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் எவரும் அத் தேவைப்பாட்டினை நிறைவேற்றி இருக்காதிருந்தும் மீளாய்வாண்டிற்கான மேலதிக நேர வேலையாகச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 920,836,747 ஆகும். | வருகை மற்றும் வெளிச் செல்லலினை குறித்துக் கொள்வதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரங்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அரசாங்க துறையின் அனைத்து உத்தியோகத்தர் களுக்குமான உரிய பொது சுற்றறிக்கையின் பிரகாரம் சுங்க பதவியணியினர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 3.2(ஆ) பந்தி | மேலதிக நேர வேலை நிதியத்தில் முதலீடாக ரூபா 13,330,735 பணம் மற்றும் திறைசேரி நிதியாக ரூபா 2,233,422,822 பணம் நீண்டகாலமாக ஒன்று சேர்த்து | 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் சுங்க திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கடமை நேரங்களுக்குப் | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒன்று சேர்ந்து காணப்பட்ட மிகைப் பணம் திறைசேரியுடன் கலந்தாலோசித் |

| | | |
|---|---|---|
| காணப்பட்டிருந்தும் சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அந்த மிகைப் பணம் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை . | புறம்பாக நிறைவேற்றப்படுகின்ற சேவைகளுக்காக கட்டணம் அல்லது அறவீடுகளாக அறவிடப்படுகின்ற அனைத்துப் பணமும் 6000-0-0-6-32 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்கு பரீட்சித்தல் கட்டணம், சுங்க தகவல்கள் மற்றும் தொழிலநுட்ப தொடர்பாடல் நிதியத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் நிருவாக அதிகாரியானவர் சுங்கப் பணிப்பாளர் நாயகமாகும். வருடாந்தம் மேலதிக நேர வேலையாக ஒன்று சேர்கின்ற பெறுவனவுகளில் 10 சதவீதம் அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டு மிகுதியான 90 சதவீதமான பணம் சுங்க உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்றது. மேலும் தாபன விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மேலதிக நேர வேலையாக ஒன்று சேர்கின்ற கட்டணங்களில் 10 சதவீதம் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டு மிகுதிப் பணம் உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு இடமளிக்கலாம். இந்த வகையில் நடவடிக்கை எடுப்பதனூடாக மிகவும் சிறந்த ஊழியர் ஊக்குவிப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் கூடுதலாக சேவையில் ஈடுபடுவதன் காரணமாக திணைக்களத்தின் செயற்திறன் | து பொருத்தமான வேலைத் திட்டத்தினை ஈடுபடுத்துதல் வேண்டும். |

அதிகரிப்பதற்கு காரணமாகும். அவ்வாறே இந்த நிதியத்தில் காணப்படுவதனாது திரண்ட நிதியத்திற்கு 10 சதவீதம் செலவு வைக்கப்பட்டதன் பின்னர் மிகுதியாகக் காணப்படுகின்ற பணம் என்பதனால் 2016 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு உருவாகியிருக்கவில்லை என தயவாகத் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 55,141,127 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 334,904,166 ஆகும். அதற்கிணங்க, நிதி விளைவுகளில் ரூபா 390,045,293 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அதற்காக பின்வரும் விடயங்கள் தாக்கமளித்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டில் மேலதிக நேர வேலை வருமானத்தை அதிகரிப்பதற்காக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் மேலதிக நேர வேலை மீளாய்வுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து ஒரு மணித்தியாலத்திற்குச் செலுத்தப்படுகின்ற மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதி சுங்கப் பணிப்பாளர்களுக்காக ஒரு மணித்தியாலத்திற்குச் செலுத்தப்படுகின்ற மேலதிக நேர வேலைப் படியை ரூபா 81.24 வரை அதிகரிப்பதற்கும் அனைத்து சுங்கப் பணிப்பாளர்களுக்கும் 600 மணித்தியால மேலதிக நேர வேலைப்படியைச் செலுத்துவதற்கும் மேலதிக நேர வேலை மீளாய்வுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தமை நிதியத்தில் பற்றாக்குறை ஏற்படுவதற்கு அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

சுங்க கட்டளைச் சட்டத்தின் 103 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட 2017 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க அதிவிசேட அறிவித்தலின் பிரகாரம் உத்தியோகத்தர்களினால் வழமையான கடமை நேரங்களுக்கு புறம்பான நேரங்களின் போது மேற்கொள்ளப்படுகின்ற கடமைகளுக்காக மற்றும் வழமையான கடமை நிலையங்களுக்குப் புறம்பான நிலையங்களில் நிறைவேற்றப்படுகின்ற கடமைகளுக்காக அது தொடர்பான தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்களும் அறவீடுகளும், இலங்கை முதலீட்டுச் சபைக்கு தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்காக இந்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்களும் நிதியத்திற்குச் செலவு வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறே அந்த மேலதிகக் கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் இந்நிதியத்தின்

செலவாகக் கருதப்படுகின்றது. அதற்கிணங்க மீளாய்வாண்டில் மேலே குறிப்பிட்டவாறு மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குப் பரிசோதனை, தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள் என்பவற்றிற்காக அந்த வேலைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு முறையே ரூபா 954,715,434, ரூபா 309,047,969 மற்றும் ரூபா 14,976,000 சேகரிக்கப்பட்டிருந்ததும் அவ்வேலைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு முறையே மேதிலக நேர வேலை வருமானத்தில் 96 சதவீதமாக ரூபா 920,836,747 தொகை கப்பல் சரக்கு பரிசோதனை வருமானத்தில் 50 சதவீதமாக ரூபா 154,523,984 தொகை மற்றும் தகவல் தொழில்நுட்ப வருமானத்தில் 80 சதவீதமாக ரூபா 11,980,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டில் நடைமுறைச் சொத்துக்கள் 6.08 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்த விகிதம் 5.98 ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்துக்கள் விகிதத்தில் 0.1 விகித வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உத்தியோகத்தர்கள் நாளாந்தம் தொடர்ச்சியாக 24 மணித்தியாலங்கள் முழுவதும் சேவையில் ஈடுபடுதல் மிகவும் நியாயமற்ற நிலைமையாக இருந்த போதிலும், சுங்க திணைக்களத்தின் சில உத்தியோகத்தர்கள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக ஒரு நாளைக்கு 24 மணித்தியாலங்கள் வீதம் சேவையில் ஈபடுத்தப்பட்டுள்ளார்கள் என அறிக்கையிடப்பட்டு மேலதிக நேர வேலை செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு செய்யும் நடைமுறையைத் திருத்தம் செய்வது தொடர்பாக ஆய்வு செய்து வரப்படுவதுடன் வருகை மற்றும் வெளிச் செல்லலினைப் பதிவு செய்வதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரங்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மேலதிக நேர வேலைக்கு கொடுப்பனவு செய்யும் போது மேற்பார்வை உத்தியோகத்தர் களின் தீவிர மேற்பார்வை இடம்பெறுதல் வேண்டும். |
| (ஆ) | மேலதிக நேர வேலை நிதியத்தின் கொடுப்பனவுகள் முறையான கட்டுப்பாட்டின் கீழ் இடம்பெற்றிருக்கவில்லை என முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தும் இந்நிலைமையை முறைமைப்படுத்துவதற்காக | இது சம்பந்தமாக சுங்க கட்டளைச் சட்டத்தின் 103 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகள், இன்றுவரை வழங்கப்பட்ட திணைக்கள கட்டளை, மேலதிக நேர வேலைக் குழுவின் சிபார்சுகள் என்பவற்றின் அடிப்படையில் நடவடிக்கை | இது தொடர்பாக காணப்படுகின்ற சட்ட விதிகளின் பிரகாரம் முறையான பரிசோதனை மேற்கொள்ளப் படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இன்றுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு சம்பந்தமாக முறையான நடைமுறையைத் தயாரிப்பது தொடர்பாக திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | மேலதிக நேர வேலைக் கொடுப்பனவை திருத்தம் செய்வதற்காக பொது நிருவாக அமைச்சின் மற்றும் நிதி அமைச்சின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நிர்ணயிக்கப்பட்டவாறு இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளாது மேலதிக நேர வேலை மீளாய்வுக் குழு எனும் பெயரிலான ஒரு உள்ளகக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் 04 சந்தர்ப்பங்களின் போது மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | சுங்க திணைக்களத்தினுள் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகளுக்கான புதிய நடைமுறையினைத் தயாரிப்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு செய்யும் போது மேற்பார்வை உத்தியோகத்தர் களின் மூலம் தீவிர மேற்பார்வை இடம்பெறுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான அரசாங்க பங்களிப்பு (10 சதவீதம்) கழித்ததன் பின்னர் மேலதிக நேர வேலை வருமானமாக ரூபா 859,244,971 சேகரிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அந்த நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ள செலவுகள் ரூபா 914,386,098 ஆக இருந்ததன் காரணமாக மீளாய்வாண்டில் மேலதிக நேர வேலை நிதியத்தின் பற்றாக்குறை ரூபா 55,141,127 ஆக இருந்தது. அப்பற்றாக்குறையைத் தீர்த்து வைப்பதற்காக முன்னைய ஆண்டில் நிதியத்தில் காணப்பட்ட திரண்ட மீதிகள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நடைமுறை நிலைமையினை கவனத்திற்கு எடுத்து முறையான மேற்பார்வை மற்றும் முறையான அங்கீகாரத்தின் கீழ் மேலதிக நேர வேலை கொடுப்பனவுகள் இடம்பெறுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கட்டணம் மற்றும் அறவீடுகளின் விலைகளைத் திருத்தம் செய்வதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் குழுவின் தீர்மானத்திற்கு இணங்க 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து ஒரு மணித்தியாலத்திற்குச் செலுத்தப்படுகின்ற மேலதிக வேலைக் கொடுப்பனவுகள் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பிரதி சுங்கப் பணிப்பாளர்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்குச் செலுத்தப்படுகின்ற மேலதிக நேர வேலைப்படி விகிதத்தினை அதிகரிப்பதும், அனைத்து சுங்க பணிப்பாளர்களுக்கும் ஒரு மாதத்திற்கு 600 மணித்தியாலங்கள் மேலதிக நேர வேலைப் படியினைச் செலுத்துவதற்கும் 07 பிரிவுகளின் உதவி சுங்க அத்தியட்சகர்களுக்கு ஒரு மாதத்திற்கு 600 மணித்தியாலங்கள் வரையிலான மேலதிக நேர வேலைப் படிகள் செலுத்துவதற்கும் மேலதிக நேர வேலைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருத்தல் இந்நிதியத்தில் பற்றாக்குறை ஏற்படுவதற்கு பெரும்பாலும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறு சுங்க பதவியணியினருக்கு படிகளை அதிகரித்து கொடுப்பனவு செய்வதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நடைமுறை நிலைமையினை கருத்திற் கொண்டு முறையான மேற்பார்வை மற்றும் முறையான அங்கீகாரத்தின் கீழ் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள் இடம்பெறுதல் வேண்டும். |